Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.124/2020

Depositions of : PW3 (LW3 )
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜா | தொழில் | : பிரியாணி மாஸ்டர் |
| தந்தை பெயர் | : சேவியர் | முகவரி | : எண்.2, 14 வது தெரு, கே.கே.ரோடு, வெங்கடாபுரம், அம்பத்தூர். |
| வயது | : 40 | மாவட்டம் | : சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of July - 2025.

(எதிரிகள் 1, 2, 3, 5, 6 ஆஜர். எதிரிகள் 4, 7, 8 ஆகரில் இல்லை மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)

<u>முதல் விசாரணை:-</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகின்றேன். நான் அம்பத்தூர், கனரா வங்கி அருகில் உள்ள பாண்டியன் ஓட்டலில் பிரியாணி மாஸ்டராக வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. இன்றிலிருந்து சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு இரவு 7.00 மணிக்கு வேலை முடித்து அம்பத்தூர் மீன் மார்க்கெட் அருகில் உள்ள ஒயின் ஷாப்பில் மது அருந்திவிட்டு பக்கத்தில் இருந்த துணிக்கடையில் படுத்துவிட்டேன். ஒரே சத்தமாக இருந்தது. போலிசார் வந்து என்னை எழுப்பி ஒரு கையொப்பம் வாங்கி கொண்டார்கள். என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை=

போலிசார் என்னை விசாரித்தனர் என்றும் அப்பொழுது கடந்த 06.07.2019 அன்று வெங்காபுரம் அரசு மதுபான கடையின் பாரில் நானும், உறரி மற்றும் எங்கள் நண்பன் வேணுகோபால் ஆகியோரும் மது அருந்த உட்கார்ந்திருந்த பொழுது எதிரிகள் அனைவரும் ஆயுதங்களுடன் வந்தனர் என்றும் ரஞ்சித்குமாரும் டார்வினும் உறரிதாஸை சேரில் உட்கார்ந்தவாறு பிடித்துக்கொள்ள எதிரி மணிவண்ணன் கையில் வைத்திருந்து வெட்டுகத்தியால் இடதுபுறமாக வெட்டினான் என்றும். உறரி சேரில் இருந்து அப்படியே எழுத்த பொழுது மீண்டும் மணிவண்ணன் உறரியை வெட்டினான் என்றும் உறரி அதை கைகளால் தடுத்த பொழுது அந்த வெட்டு உறரியின் இரண்டு கைகளிலும் பட்டது என்றும் அசோக் கையில் வைத்திருந்த கத்தியால் உறரியின் நடுமுதுகில் குத்தினான் என்றும் செந்தில் வெட்டுக்கத்தியால் உறரியின் இடது முழங்காலில் வெட்டினான் என்றும், அப்பொழுது தாஸ் கத்தியால் உறரியின் தலையிலும் முகத்திலும் வெட்டினான் என்றும் நெப்போலியன் உறரியின் கழுத்தின் இடது பக்கமாக மாறி மாறி வெட்டினான் என்றும், உறரி உடல் முழுதும் பலத்த வெட்டுகாயத்துடன் அங்கேயே இறந்துவிட்டான் என்றும் எதிரிகள் அங்கிருந்த காலி பாட்டில்களை உடைத்துவிட்டு அங்கிருந்தவர்களை கத்தியை காட்டி மிரட்டிக்கொண்டேபோய்விட்டார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளுக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.124/2020

Depositions of : PW2 (LW2)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேணுகோபால் | தொழில் | : கரும்பு சாறு கடை |
| தந்தை பெயர் | : பாவாடை | முகவரி | : எண்.6, வெங்கடேஸ்வரா நகர், அம்பத்தூர். |
| வயது | : 43 | மாவட்டம் | : சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of July - 2025.

(எதிரிகள் 1, 2, 3, 5, 6 ஆஜர். எதிரிகள் 4, 7, 8 ஆகரில் இல்லை மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)

<u>முதல் விசாரணை:-</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகின்றேன். நான் அம்பத்தூர் வெங்கடாபுரம் ரோட்டில் கரும்பு சாறு கடை நடத்தி வருகின்றேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. கடந்த 07.07.2019 அன்று இரவு 8.45 மணிக்கு நான் என் கடையில் இருந்த பொழுது பொதுமக்கள் யாரையோ வெட்டிவிட்டார்கள் என்று சொல்லி ஓடினார்கள். நான் ஒயின்ஷாப்பிற்குள் ஓடினேன். நான் போன பொழுது உறரி என்பவர் இறந்து கிடந்தார். அதன் பிறகு போலிசார் வந்து உறரியின் உடலை ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டு என்னிடம் கையொப்பம் ஒன்றை வாங்கிகொண்டார்கள். உறரி எனது கடையின் உரிமையாளர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தனர். அப்பொழுது மேற்கண்ட சங்கதிகளை

தான் சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—

போலிசார் விசாரணையில் கடந்த 06.07.2019 அன்று வெங்டாபுரம் அரசு மதுபான கடையின் பாரில் நானும், உறரி மற்றும் எங்கள் நண்பன் ராஜா ஆகியோரும் மது அருந்த உட்கார்ந்திருந்த பொழுது எதிரிகள் அனைவரும் ஆயுதங்களுடன் வந்தனர் என்றும் ரஞ்சித்குமாரும் டார்வினும் உறரிதாஸை சேரில் உட்கார்ந்தவாறு பிடித்துக்கொள்ள எதிரி மணிவண்ணன் கையில் வைத்திருந்து வெட்டுகத்தியால் இடதுபுறமாக வெட்டினான் என்றும். உறரி சேரில் இருந்து அப்படியே எழுத்த பொழுது மீண்டும் மணிவண்ணன் உறரியை வெட்டினான் என்றும் உறரி அதை கைகளால் தடுத்த பொழுது அந்த வெட்டு உறரியின் இரண்டு கைகளிலும் பட்டது என்றும் அசோக் கையில் வைத்திருந்த கத்தியால் உறரியின் நடுமுதுகில் குத்தினான் என்றும் செந்தில் வெட்டுக்கத்தியால் உறரியின் இடது முழங்காலில் வெட்டினான் என்றும், அப்பொழுது தாஸ் கத்தியால் உறரியின் தலையிலும் முகத்திலும் வெட்டினான் என்றும் நெப்போலியன் உறரியின் கழுத்தின் இடது பக்கமாக மாறி மாறி வெட்டினான் என்றும், உறரி உடல் முழுதும் பலத்த வெட்டுகாயத்துடன் அங்கேயே இறந்துவிட்டான் என்றும் எதிரிகள் அங்கிருந்த காலி பாட்டில்களை உடைத்துவிட்டு அங்கிருந்தவர்களை கத்தியை காட்டி மிரட்டிக்கொண்டேபோய்விட்டார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளுக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.